**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**அசல் மனு எண் :113/2012**

**PW2 : திரு.ரஞ்சித், த/பெ.மூர்த்தி**

**07.12.2024**

சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**நேரம் 14.50 மணி**

வாதி மூர்த்தி என் தகப்பனார் ஆவார். வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் என் பாட்டியின் நிலத்தை விற்று என் அத்தை அன்புச்செல்வி மற்றும் அத்தை மகன் யுவராஜன் ஆகியோர் எடுத்துக்கொண்டார்கள். எங்களுக்கு வரவேண்டிய பணத்தை கொடுக்கவில்லை. ஆகவே, இந்த வழக்கை என் தந்தை தாக்கல் செய்துள்ளார். என் அத்தை மற்றும் யுவராஜன் பொன்னியம்மன் மேட்டில் எண்.7, முனுசாமி நகர் விரிவாக்கம், சென்னையில் இடமும், ஸ்ரீபெரும்புதூரில் 2 கிரவுண்டு நிலம் 15 லட்சம் ரூபாய்க்கு வாங்கினார்கள், புட்லூரில் ஒரு கிரவுண்டு இடத்தை வாங்கினார்கள், ஆற்காட்டில் எண்.7, சாம்பசிவம் தெரு, தோப்புக்கானம் என்ற இடத்தையும், எஸ்.எஸ்.எஸ். மகளிர் கல்லூரி அருகில் மூன்று மனை பிரிவுகள், ஆற்காடு விளாம்பாடி 75 சென்ட் விவசாய நிலமும் , கெட்டினமல்லி கிராமத்தில் 38 சென்ட் அன்புச்செல்வி பெயரில் கிரையம் செய்துள்ளார்கள், 27 சென்ட் கெட்டினமல்லி கிராமத்தில் பாகப்பிரிவினையாக என் அத்தைக்கு கொடுத்துள்ளார்கள், மீதி இடத்தை நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம். ஒரு லட்சம் பணம் என் தாத்தாவின் பெயரில் கொளத்தூர் இந்தியன் வங்கிக்கணக்கில் உள்ள பணம், 50 சவரன் நகைகள் ஆகியவற்றை என் அத்தை 2006ம் வருடம் எடுத்துச்சென்றார்கள். 1 லட்சம் பணம் உள்ள வங்கிக்கணக்கின் எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த வங்கிக்கு நான் சென்று என் தாத்தா பெயரில் பணம் உள்ளது, அது என்ன ஆனது என்று கேட்டோமா என்றால் இல்லை. என் தாத்தா

காசிராஜன் அவர் வாழ்நாளில் அவர் வைத்திருந்த பணத்தை செலவு செய்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தாத்தா, என் அத்தை விற்ற என் பாட்டியின் நிலத்தை கிரையம் செய்யும்போது என் தந்தை கையொப்பம் செய்துள்ளாரா என்றால் 3 பேரும் கையொப்பம் செய்துள்ளார்கள். என் அத்தை மற்றும் யுவராஜின் வற்புறுத்துதலால் என் தாத்தா மற்றும் என் அப்பா கையொப்பம் செய்தார்கள். மேற்படி விவரம் குறித்து என் தந்தை, என் அத்தை அல்லது யுவராஜின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளோம். எங்களை அடித்து விரட்டி எங்கள் வீட்டையும் எடுத்துக்கொண்டு விரட்டினார்கள், அப்போது நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். திரு.வி.க. நகர் வீட்டை போலியாக ஆவணங்கள் ஏற்படுத்தி விற்றுவிட்டார்கள். வா.தசா.ஆ.42 ஆவணத்தில் என் தந்தையார் புகார் கொடுத்துள்ளார், என்ன காரணத்திற்காக புகார் கொடுத்துள்ளார் என்றால் காசிராஜன், அன்புச்செல்வி ஆகியோர் தகாத வார்த்தைகளால் பேசி, வீட்டை காலி செய்ய சொல்வதாக புகார் கொடுத்துள்ளார். என் பாட்டியின் நிலத்தை விற்ற ஆண்டு என்ன என்றால் 2004 முதல் 2007 க்குள் விற்றார்கள். வா.தசா.ஆ.42 புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 30.11.2010 ஆகும். என் தாத்தா, என் அப்பா, என் அத்தை 3 பேரும் என் பாட்டியின் நிலத்தை 60 லட்சத்திற்கு விற்று 3 பாகமாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. சொத்துக்கள் விற்ற பிறகு பங்கு கேட்டு காசிராஜன், அன்புச்செல்விக்கு என் தந்தையார் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. என் தாத்தாவை என் தந்தையார் வற்புறுத்தி கே.சி. கார்டன் வீட்டை செட்டில்மெண்ட் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. 08.11.2006 அன்று ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் என் தந்தை என் தாத்தாவிடம் கேசி கார்டன் வீட்டை ஒரு செட்டில்மெண்ட் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். கெட்டினமல்லியில் உள்ள 27 சென்ட் நிலத்தை இந்த வீட்டிற்கு பதிலாக என் அத்தைக்கு கொடுத்தோம். அதை விற்று பொன்னியம்மன்மேட்டில் உள்ள இடத்தை வாங்கினார்கள். அந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த இடத்தை என் தாத்தா, என் அப்பா, என் அத்தை ஆகியோர் சேர்ந்து விற்று அந்த பணத்தை என் அத்தை வாங்கிக்கொண்டார். என் தாத்தாவை என் தந்தை கேசி கார்டன் வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டார் என்று என் தாத்தா என் தந்தை பெயரில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் என் அத்தை மற்றும் யுவராஜின் வற்புறுத்துதலால் பொய் புகார்

கொடுத்துள்ளார். என் தாத்தாவை வீட்டை விட்டு வெளியே அனுப்பியதால் என் தாத்தா அவர் மகள் வீட்டிற்கு சென்றாரா என்றால் அவரை பயமுறுத்தி வீட்டில் வைத்திருந்தார்கள். கேசி கார்டன் வீட்டில் இருந்து என் தாத்தாவை என் அப்பா விரட்டி அடித்ததால் என் தாத்தா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும் காவல் நிலையத்தில் உரிமையியல் நீதிமன்றத்தை நாடி வழக்கு போடுமாறு கூறியதின்பேரில் என் தாத்தா சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 8012/2007 என்ற வழக்கை என் தந்தையாரின் பேரில் தாக்கல் செய்தார் என்றால் என் அத்தை மற்றும் யுவராஜின் வற்புறுத்துதலால் தாக்கல் செய்தார். அந்த வழக்கில் வழக்கு விசாரணையின் போது என் அப்பா தாத்தா என் வீட்டில் இருப்பார் என்று கூறியதால் அந்த வழக்கை தள்ளுபடி செய்தார்கள். என் தாத்தாவை என் தந்தையுடன் அனுப்பி வைத்தார்கள். என் தாத்தா தாக்கல் செய்த அசல் வழக்கு முழுமையாக விசாரணை நடைபெற்று என் தாத்தாவிற்கு சாதகமாக 05.01.2008 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள். என் தாத்தாவை நாங்கள் வரவேண்டாம் என்று சொல்லவில்லை. நான் பிடெக் படித்துள்ளேன். அசல் வழக்கு எண். 8012/2007, 05.01.2008 என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்புரையில் என்ன கூறப்பட்டுள்ளது என்றால் the suit is decreed as prayed for without cost என குறிப்பிடப்பட்டுள்ளது. என் தாத்தா என் அப்பாவிற்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 05.11.2007 தேதியிட்ட ஒரு ரத்து ஆவணம் மூலம் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் வாரிசுத்தாரர் யாருக்கும் தெரியாமல் 85 வயதான என் தாத்தாவை அழைத்துக்கொண்டு சென்று யுவராஜன் அவ்வாறு செய்துள்ளார். அப்போது என் தாத்தாவிற்கு கண் ஆப்ரேஷன் செய்திருந்தார்கள். என் தாத்தாவிற்கு விருப்பம் இல்லாமல் அந்த ஆவணத்தை ரத்து செய்தார்களா என்றால் என் தாத்தாவிற்கு அதில் விருப்பம் கிடையாது. சார்பதிவாளர் அலுவலர் முன்பு தான் ஆவணங்கள் பதிவு செய்யப்படும், என் தாத்தாவிற்கு விருப்பம் இல்லை என்றால் என் தாத்தா சார் பதிவாளரிடம் கூறியிருக்கலாம் என்றால் என் தாத்தாவை மிரட்டி வாங்கியிருக்கிறார்கள். அந்த ஆவணத்தை ரத்து செய்தபிறகு தான் என் தாத்தா அசல் வழக்கு எண். 8012/2007 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் என் அப்பா வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்தினார் என்றால் சரிதான். இந்த வழக்கில் என் அப்பா கட்சி செய்யும்போது தனது

தந்தையார் தனக்கு எழுதி வைத்த ஆவணம் ரத்து செய்த விவரம் என் அப்பாவிற்கு தெரியும் என்றால் இந்த வழக்கு நடக்கும்போது தெரியவந்தது. அதன்பிறகு கேசி கார்டன் சொத்தை என் தாத்தா யுவராஜன் பெயரில் முழு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் போலி ஆவணம் மூலம் யுவராஜன் அவ்வாறு செய்துள்ளார். செட்டில்மெண்ட் ஆவணம் என் அப்பாவிற்கு எழுதி வைத்த ஆவணத்தை ரத்து செய்ததற்கு என் அப்பா சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 2298/2010 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகள் ஒரு இடைமனு தாக்கல் செய்து அந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரியதின் பேரில் என் அப்பா தாக்கல் செய்த வழக்கு 18.02.2014 அன்ற தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் 2010ம் வருடத்தில் போட்ட வழக்கு 2012ம் வருடம் முடிந்தது, பின்னர் 2ம் மேல் முறையீட்டு வழக்கில் 2024ம் வருடம் முடிந்தது. சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தற்போது ஒருதலைபட்சம் ஆகியுள்ளது. என் அப்பா தாக்கல் செய்த வழக்கு 18.02.2014 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு என் அப்பா 09.07.2014 அன்று என் பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் கேசி கார்டன் குறித்து எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என் அப்பாவின் பெயரில் பட்டா உள்ளது. மேற்படி ஆவணம் எழுதி வைக்கும்போது என் அப்பா தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதும்போது என் தாத்தா உயிருடன் இருந்தாரா என்றால் ஆற்காட்டில் இருந்தார்.

**நேரம் 15.35மணி**

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.